# கொழும்பு பல்கலைக்கழகம்

# இலங்கை

# சட்ட பீடம்

# பகிரங்க மற்றும் சர்வதேச சட்டத் திணைக்களம்

# பகிரங்கச் சட்டம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி (DPL) 2021/2022

## மாணவர்களுக்கான தகவல் மற்றும் அறிவுறுத்தல் வழிகாட்டி

## இறுதி நிகழ்நிலை பரீட்சை- இரண்டாம் தவணை

இவ்வழிகாட்டியில் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்களானவை 2020 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியல் நிகழ்ச்சிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) துணைச் சட்டங்களின் தேர்வுகள் தொடர்பான கையேட்டுடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும். இவ்வழிகாட்டிக்கும் துணைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடுகள் எழுமாயின் துணைச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கும்.

சட்டபீடத்தின் நிகழ்நிலைப் பரீட்சைக்கு முகம்கொடுக்கும் அனைத்து மாணவர்களும் இவ்வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வாசித்து அறிந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர் என்பதை கவனத்திற் கொள்க. ஏதேனும் வினாக்கள் இருப்பின் அல்லது மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் அவை DPL க்கான ஒருங்கிணைப்பாளர் அல்லது சட்டபீடத்தின் பகிரங்க மற்றும் சர்வதேச சட்டத் திணைக்களத்தின் தலைவருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

### (அ) பரீட்சை முறைமை மற்றும் கட்டமைப்பு (Mode and Structure of Examination)

1. தவணை இறுதிப் பரீட்சையானது எழுத்துமூலமான மற்றும் திறந்த புத்தக பரீட்சையாக இருக்கும். இது நிகழ்நிலை தேர்வாக நடத்தப்படும். பரீட்சார்த்திகள் இரண்டு (2) மணித்தியாலங்களுக்குள் **ஐந்து (5)** வினாக்களில் **இரண்டு (2)** வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டும்.
2. இத்தேர்வில் எவ்வித கட்டாய வினாவும் இடம்பெறாது.

### (ஆ) மதிப்பெண்கள் (Marks)

1. இப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த புள்ளிகள் 60%. [எஞ்சிய 40% புள்ளிகள் 1997 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க துணைச்சட்டத்தின் படியாக தொடர் கணிப்பீட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது].

## (இ) கால அளவு (Time Duration)

பரீட்சார்த்திகள் தங்களின் விடைகளை 2 மணித்தியாலங்களுக்குள் எழுத வேண்டும். விடைத்தாளினை கற்றல் முகாமைத்துவ அமைப்பில் (LMS) பதிவேற்ற மேலதிகமாக 1 மணித்தியாலம் வழங்கப்படும்.பரீட்சைக்கான மொத்த கால அளவு 3 மணித்தியாலங்கள். மேலதிக நேரம் வழங்கப்படமாட்டாது. பரீட்சை முற்பகல் 9.00 மணியளவில் ஆரம்பித்து நண்பகல் 12.00 மணியளவில் நிறைவடையும்.

பரீட்சையின் விடயப்பொருள் மற்றும் வடிவம் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு விடைத்தாள்களை பதிவேற்றம் செய்வதற்கு ஒரு மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளதென்பதை கவனத்திற் கொள்க.

வழங்கப்பட்ட நேரத்திற்குள்ளும் நண்பகல் 12.00 மணிக்கு பிந்தாமலும் விடைப்பபத்திரங்களை கற்றல் முகாமைத்துவ அமைப்பில் (LMS) பதிவேற்றுதல் உட்பட குறித்த நேரத்திற்குள் பரீட்சையை நிறைவு செய்தல் என்பவை பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். பரீட்சார்த்திகள் தங்களுக்கு வழங்கப்பட்ட நேரத்தை நியாயமாக முகாமை செய்வதனூடாக் எதிர்பார்க்காத யாதாயினும் தொழிநுட்ப அல்லது இணைய இணைப்பு தொடர்பான பிரச்சினைகள் யாதாயினம் எழுமாயின் அக்காலப்பகுதிக்குள் அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளலாமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## (ஈ) (A) பரீட்சை முன்னாயத்தம் (pre-examination preparation)

1. குறைந்த பட்சம் பரீட்சைக்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகவேனும் தாங்கள் **LMS இலிருந்து தங்களது பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மென்பிரதியினை அணுகி தரவிறக்கி கொள்வதனை** உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
2. LMS இலிருந்து **பிரகடனப் பத்திரங்களை தரவிறக்கிக் கொள்ளவும் (பொதுப் படிவம் மற்றும் விசேட படிவம்)**.
3. LMS இலிருந்து நியம முன்பக்கத்தை தரவிறக்கிக் கொள்ளவும்.
4. நீங்கள் பரீட்சைக்கு முகம் கொடுப்பதற்கு முறையான வகையில் முன்னாயத்த நிலையில் உள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். முன்னாயத்த நிலையென்பது எழுதுவதற்கு பொருத்தமான தாள்கள், கருப்பு பால்பொயின்ட் பேனா, பொருத்தமான மின்னியல் சாதனங்கள், இணக்கமான தொழிநுட்பம், இணைய வசதி மற்றும் **<u>கற்றல் முகாமைத்துவ அமைப்பிற்குள் (LMS)</u>** பிரவேசிப்பதற்கான வசதி என்பவற்றை உள்ளடக்கும்.

## (ஈ) (B) குறித்த பரீட்சை நாளில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிமுறைகள் (Procedure to be followed on the Day of the Relevant Examination)

1. குறித்த பரீட்சை நாளில் கையொப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பிரகடனப் பத்திங்களின் (பொது மற்றும் விசேட) ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை அதற்காகவென கற்றல் முகாமைத்துவ அமைப்பிற்குள் (LMS) **தனித்தனியே வழங்கப்பட்டள்ள தளங்களில்** பதிவேற்ற வேண்டும்.
2. நீங்கள் பரீட்சை தினத்தில் அவ்வாவணங்களை முற்பகல் 8.00 இலிருத்து முற்பகல் 8.45 க்குள் பதிவேற்றம் செய்ய வேண்டப்படுகின்றீர்கள். **கையொப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பிரகடனப் பத்திங்களை (பொது மற்றும் விசேட) பரீட்சைக்கு முன்னதாக பதிவேற்றம் செய்வது கட்டாயமானதாகும் என்பதனைக் கருத்திற் கொள்க.**
3. உங்கள் வசம் பாடநெறி ஒருங்கிணைப்பாளர் (DPL), பரீட்சைக்காக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர், மற்றும் பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர்களின் உத்தியோகபூர்வ தொலைபேசி எண்களை வைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.அத் தொலைபேசி இலக்கங்களை கற்றல் முகாமைத்துவ அமைப்பில் (LMS) பெற்றுக்கொள்ளலாம்.

## (உ) பரீட்சை (The Examination)

1. இப்பரீட்சை இரண்டு (02) மணித்தியாலங்களுக்கானது. குறித்துரைக்கப்பட்ட வகையில் வினாத்தாள்களை பதிவேற்றம் செய்வதற்காக மேலதிகமாக ஒரு (01) மணித்தியால கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
2. பரீட்சை வினாத்தாளானது கற்றல் முகாமைத்துவ அமைப்பு தளத்தில் (LMS) முற்பகல் 8.55 மணிக்கு காணக்கூடியதாகவிருக்கும். பரீட்சார்த்திகள் அவ் வினாத்தாளினை பொருத்தமான சாதனமொன்றில் (மடிக்கணணி (லெப்டொப்), கணணி (டெஸ்க்டொப்) மற்றும் வேறு) பதிவிறக்கம் செய்துகொண்டு பரீட்சையினை தொடங்க வேண்டப்படுகின்றீர்கள்.
3. இப்பரீட்சை முற்பகல் 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரைக்குமானது. முற்பகல் 11.00 மணிக்க பிறகும் விடைத்தாளில் தொடர்ந்த விடையெழுதும் எவரும் பரீட்சைக் குற்றமொன்றைப் புரிந்ததாகக் கருதப்படுவர்.
4. பரீட்சார்த்திகள் நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் விடைத்தானினை **நியம முன் பக்கத்தையும் இணைத்து** கற்றல் முகாமைத்துவ அமைப்பில் (LMS) பதிவேற்றம் செய்ய வேண்டப்படுகின்றீர்கள். விடைத்தாள்களைப் பதிவேற்றுவதற்காக கற்றல் முகாமைத்துவ அமைப்பில் (LMS) டிராப் பொக்ஸ் (drop box) ஒன்று உருவாக்கப்படும் (இது தொடர் மதிப்பீட்டுக்கான ஒப்படைகளின் நிகழ்நிலை சமர்ப்பித்தலை ஒத்தது).

5. சட்டபீடமானது பரீட்சைக்காக விரைவு தொலைபேசி அமைப்பொன்றை (ஹாட்லைன்) செயற்படுத்தும். பாடநெறி ஒருங்கிணைப்பாளர், பரீட்சைக்காக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர், மற்றும் பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர்களை இவ்விரைவு தொலைபேசி அமைப்பினூடாக தொடர்பு கொள்ளப்பட முடியும். இதற்கு மேலதிகமாக பரீட்சார்த்திகள் அவர்களை உத்தியோகபூர்வ மின்னஞ்சலூடாக தொடர்பு கொள்ளலாம். குறித்த தொடர்பு தகவல்கள் பரீட்சைக்கு முன்னதாக வழங்கப்படும்.

## (ஊ) பரீட்சையின் போது பின்பற்ற வேண்டிய குறிப்பான படிமுறைகள் (Specific Steps to be followed during Examinations)

1. பரீட்சை தினத்தன்று முற்பகல் 8.45 க்கு முன்னதாக கற்றல் முகாமைத்துவ அமைப்பிற்குள் (LMS) உள்நுழைக. முற்பகல் 8.55 அளவில் நீங்கள் வினாத்தாளிற்கான இணைப்பை அழுத்தி அதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. பொதுவான முதற் பக்கத்தை உங்களது விடைப்பத்திரத்தின் முதல் பக்கமாக பாவிக்கவும் (அது கற்றல் முகாமைத்துவ அமைப்பில் வழங்கப்படும்).
3. உங்களது விடைகளை **A4 அளவிலான** தாளில் எழுதவும் (கோடிட்ட தாள் அல்லது வேறு தாள்).
4. நேர்முக பரீட்சையை ஒத்த வகையில் உங்களது விடைகளை **கணணி மயப்படுத்திய தட்டச்சு செய்யவொ, தட்டச்சு செய்யவோ அனுமதிக்கப்பட மாட்டாது.** இவ்விதி பொருத்தமான பல்கலைக்கழக துணைச்சட்டங்களின் கீழ் விதிவிலக்களிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு ஏற்புடையதாகாது (உதாரணம்: கண்பார்வைக் குறைபாடு காரணமாக). **கையால் எழுதப்பட்ட விடைத்தாள்கள் மட்டுமே** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை கவனத்திற் கொள்க.
5. உமது விடைத்தாளின் ஒவ்வொரு தாளினதும் மேல் வலது பக்கத்தில் உங்களது **பரீட்சை சுட்டிலக்கத்தினை** எழுதுக. கீழ்வரும் வடிவமைப்பில் உங்கள் விடைத்தாள்களின் பக்கங்களுக்க இலக்கமிடுக. உதாரணம்: விடைத்தாள் 25 பக்கங்களைக் கொண்டிருப்பின் 1 if 25, 2 of 25 அல்லது 1/25, 2/25.
6. தாள்களின் மொத்த எண்ணிக்கை விடைப் பத்திரத்தின் முதற்பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
7. உங்களது கையெழுத்து தெளிவாக உள்ளதென்பதையும் உங்களால் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட விடைத்தாள் தெளிவாக/வாசிக்கக்கூடியதாக உள்ளதென்பதையும் உறுதிப்படுத்திக் கொள்க. உங்களது விடைகளை எழுதுவதற்கு **கருப்பு நிற பால்பொயிண்ட் பேனாவை** பாவிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.
8. உங்களது விடைத்தாள்களை **ஸ்கேன் செய்து அல்லது புகைப்படம் எடுத்து அதனை PDF வடிவில் மாற்றவும். கற்றல் முகாமைத்துவ அமைப்ப (LMS)**

**<u>தனித்தனி பக்கங்களை பதிவேற்ற அனுமதிக்காது என்பதை கவனத்திற் கொள்க.</u>**

9. ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரேயொரு ஆவண வடிவம் **<u>PDF மாத்திரமே</u>** என்பதைக் கவனத்திற் கொள்க. உங்களது விடைத்தாள்களை **<u>JPEG/JPG அல்லது வேறு எவ்வடிவிலும் பதிவேற்ற அனுமதியில்லை.</u>**
10. கற்றல் முகாமைத்துவ அமைப்பிலுள்ள (LMS) டிராப் பொக்ஸில் (drop box) நண்பகல் 12.00 மணிக்கு பிந்தாமல் உங்களது விடைத்தாள்களை பதிவேற்றம் செய்யவும்.
11. பரீட்சார்த்திகள் தங்களின் சமர்ப்பித்தல் கிடைத்தமைக்கான தகவலை நண்பகல் 12.00 மணிக்கு பின்னர் பெறுவர்.

## (எ) சரிசெய்தல் (Troubleshooting)

1. பரீட்சையின் போது தொழிநுட்பக் கோளாறுகள் ஏதேனும் எழுமாயின் (வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்தல், விடைத்தாள்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் ஏனைய கோளாறுகள்) எழுமாயின் பரீட்சார்த்திகள் உடனடியாக விரைவு தொலைபேசி எண் மூலம் தொடர்பு கொண்டு நியமிக்கப்பட்ட மேற்பார்வையாளருக்கு அறிவிக்க வேண்டும். தயவுசெய்து விடைப்பத்திரத்தை புகைப்படமெடுத்து இப்பரீட்சைக்காக உருவாக்கப்பட்டுள்ள மின்னஞ்சல் கணக்கினூடாக அனுப்பவும்.
2. குறித்த நேரத்திற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விடைப்பத்திரமெதுவும் **<u>மதிப்பீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.</u>**

## (ஏ) பரீட்சை பிறழ்நடத்தை (Examination Misconduct)

1. பரீட்சை பிறழ்நடத்தை தொடர்பான சகல விதிகளும் நிகழ்நிலை பரீட்சையின் போதும் ஏற்புடையதாகும். பரீட்சார்த்திகள் குறிப்பாக கீழ்காணப்படும் விடயங்கள் தொடர்பில் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்:
   - நீங்கள் விடையெழுதுதல் தொடர்பில் யாதாயினும் ஒத்துழைப்பை பெறுதல் அல்லது வேறொரு பரீட்சார்த்திக்க ஒத்துழைப்பை வழங்குதலை தவிர்த்துக் கொள்ளவும்.
   - விடைகளை புகைப்படமெடுத்தல்,வேறு யாரேனும் நபருடன் அதனை பகிர்ந்து கொள்ளல் அல்லது வேறு ஏதேனும் ஊடகத்தினூடாக விடைகளை அல்லது/மற்றும் வினாக்களை பிரதியெடுத்து பதிவிடல் (Copying and Pasting) என்பவற்றை தவிர்க்கவும்.
   - பரீட்சையின் விடயப்பொருள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகளை முன்வைப்பதிலிருந்து தவிர்க்கவும்.

- அனைத்துவிதமான கருத்துத் திருட்டும் (plagiarism) பரீட்சைக் குற்றமாகக் கருதப்படும்.

2. பரீட்சை பிறழ்நடத்தைக்கு குற்றவாளியாகக் காணப்படும் எந்தவொரு பரீட்சார்த்தியின் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை கவனத்திற்கொள்க.

*****************